# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் மே மாத அவசரக்கூட்டம் 12.05.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சி கணிணி பிரிவில் பயன்பாட்டில் இருந்த பழைய மூன்று கணினிகள் பழுது ஏற்பட்டதால் அலுவலக பணிகள் மேற்கொள்ள சிரமம் ஏற்பட்டது. அலுவலக பணிகள் தொய்வின்றி இயங்க அவசர அவசியம் கருதி மூன்று கணினிகளையும் M/s.ACT Automation, Nagercoil நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்யப்பட்டு அதற்கான தொகை ரூ.8900/- வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை M/s.Act Automation, Nagercoil நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.அ2/544/2006

**தீர்மானம் எண்.2493 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண்.TN 75 L-2565, காம்பெக்டர் லாறியினை பயன்பாட்டிற்கு கொண்டு வர வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் 16.04.2021-ல் வரப்பெற்றது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | Mathava Bus Tingering works, Vellamadam | 9950/- |
| 2. | Ganesh Motor works, Nagercoil | 11000/- |
| 3. | A.R.K Automobiles, Nagercoil | 10650/- |

. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2 (ம) 3-ஐ விட வரிசை எண்.1, Mathava Bus Tingering works நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி Sec 15-ன் கீழ் வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான செலவு தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு

ந.க.எண்.1841/2013/எச்1

**தீர்மானம் எண்.2494 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் ஓடைகளை மண் மற்றும் தூர்வாரி சுத்தம் செய்திட பணியாளர்கள் (ம) டிராக்டர் வினியோகம் செய்திட பொது சுகாதார அவசர அவசியம் கருதி 30.05.2020-ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.சி.தேவராஜ் - ஒரு பணியாளர் தினக்கூலி (நாள் ஒன்றுக்கு)<br>டிராக்டர் (நாள் ஒன்றுக்கு) | ரூ.515/-<br>ரூ.2500/- |
| 2 | திரு.சி.செல்லநாடார் - ஒரு பணியாளர் தினக்கூலி (நாள் ஒன்றுக்கு)<br>டிராக்டர் (நாள் ஒன்றுக்கு) | ரூ.525/-<br>ரூ.2600/- |
| 3 | திரு.எஸ்.ஜாண்றோஸ் - ஒரு பணியாளர் தினக்கூலி (நாள் ஒன்றுக்கு)<br>டிராக்டர் (நாள் ஒன்றுக்கு) | ரூ.540/-<br>ரூ.2550/- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2 (ம) 3-ஐ விட வரிசை எண்.1, திரு.சி. தேவராஜ் என்பவரது விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு அதற்கான செலவு தொகை ரூ.69440/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து 18.08.2020-ல் Sec 15-ன் கீழ் வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்.998/2017/எச்1

**தீர்மானம் எண்.2495 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள கிருமி நாசினிகள் (ம) பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி 21.07.2020-ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | SriBalaji Marketing,Dindigul | Lime powder 1 Kg - Rs.13 (+5 %GST)<br>PPT Kit - 1 Set (Full) Rs.550/-(+5% GST)<br>Hand Sanitizer (250 ml) - Per bottle - Rs.180/- (+18% GST) |
| 2 | Sri Vinayaga Pharma, | Lime powder 1 Kg - Rs.16 (+5 %GST) |

| | | |
|---|---|---|
| | Pollachi | PPT Kit - 1 Set (Full type) Rs.600/-(+5% GST)<br>Hand Sanitizer (250 ml) - 1 bottle - Rs.210/- (+18% GST) |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2-ஐ விட வரிசை எண்.1, Sri Balaji Marketing, Dindigul நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கப்பட்டு, அதற்கான செலவு தொகை ரூ.3,00,450/- பொது நிதியிலிருந்து 03.08.2020-ல் Sec 15-ன் கீழ் வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்.423/2020/எச்1

**தீர்மானம் எண்.2496 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் - நோய்க்கு எதிர்ப்பு சக்தி அளிக்கும் வகையில் கபசுர குடிநீர் பொது மக்களுக்கு வழங்குவதற்கு சில்வர் கேன், சில்வர் டம்ளர் (ம) தட்டு போன்ற உபகரணங்கள் வாங்குவதற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி 29.06.2020-ல் விலைப்புள்ளிக்கு கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | New Annai Velankanni Metals, Monday Market | 9590/- |
| 2 | Sree Ganesh Metal stores, Thingal Nagar | 11420/- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2-ஐ விட வரிசை எண்.1. New Annai Velankanni Metals, நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கப்பட்டு, அதற்கான செலவு தொகை ரூ.9,590/- பொது நிதியிலிருந்து 09.07.2020-ல் Sec 15-ன் கீழ் வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்.423/2020/எச்1

**தீர்மானம் எண்.2497 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை பகுதியில் கதவு எண்.3-30B-ல் செயல்பட்டு வருகின்ற Assemblies of God church என்ற கட்டிடத்தின் மராமத்து பணிகள் மேற்கொற்வது தொடர்பாக அக்கட்டிடத்தின் உரிமையாளர் திரு.எஸ்.கிறிஸ்டோபர் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் Contempt Petition No.968/2019 in WP (MD) No.12164/19-ன் படி தொடர்ந்த வழக்கு

நீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்தியதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வழங்குமாறு திரு.ஆதிமூல பாண்டியன் வழக்கறிஞர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, Contempt Petition No.968/2019 in WP (MD) No.12164/19-க்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வழக்கறிஞர் திரு.ஆதிமூல பாண்டியன் அவர்களுக்கு வழங்குவதற்கு நகர்மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்.111/2015/TPI

**தீர்மானம் எண்.2498 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.7

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு ஒரு நாளைக்கு தேவையான பொருட்கள் போக மீதமுள்ள பால், காய்கறிகள் போன்ற பொருட்களை பதப்படுத்துவதற்கு வசதியாக ஒரு பிரிஸர் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கு இந்நகர்மன்றம் தீர்மானம் எண்.2480, நாள் 25.02.2021-ன்படி, மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. எனவே பிரிஸர் அவசர அவசியம் கருதி வாங்குவதற்கு நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விபரம் பின்வருமாறு,

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | A.R. Home Appliances<br>Main Road, Colachel | 24,500 |
| 2. | Anith Furniture Land<br>Kanikkaimatha Complex, Colachel | 27,500 |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் A.R. HOME APPLIANCES குளச்சல் நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று வினியோக உத்தரவு வழங்கவும், மேற்படி இனத்திற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3/2020/A3

**தீர்மானம் எண்.2499 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு 2021-2022 ஆம் நிதி ஆண்டிற்கு தேவையான சமையல் பொருட்கள், பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.35,00,000/- இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2478, நாள் 25.02.2021-ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி உத்தேச செலவினத்தில் அம்மா உணவக பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் உத்தேச செலவினமாக ரூ.9,25,000/- ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2020 வரைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது அம்மா உணவக பணியாளர்களுக்கு தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண். (4D) No.2 நாள் 26.02.2021-ன் படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.250/-

லிருந்து ரூ.325/- ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அம்மா உணவக பணியாளர்களுக்கு ஓர் ஆண்டிற்கான செலவினம் 10 நபர்களுக்கு ரூ.12,00,000/- ஆகும். எனவே மேற்காணும் மன்ற தீர்மானத்தில் அம்மா உணவக பணியாளர்கள் ஊதிய செலவினத்திற்காக மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ள ரூ.9,25,000/- லிருந்து ரூ.12,00,000/- ஆக உயர்வு செய்து ஆணையரின் முன் அனுமதி பெறப்பட்டு ஏப்ரல் 2021 மாதத்திற்கு மாத ஊதியம் வழங்கியுள்ளதற்கும் மேற்காணும் அரசாணையின் அடிப்படையில் மார்ச் 2021 மாதத்திற்கான ஊதிய நிலுவை தொகையினை அம்மா உணவக பணியாளர்களுக்கு வழங்குவதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3/2020/அ3

**தீர்மானம் எண்.2500 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.9

இந்நகராட்சி குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை உயர்வு செய்து குடிநீர் வினியோக உபவிதிகளில் திருத்தம் செய்வது தொடர்பான விளம்பரத்தை 15.02.2021 மற்றும் 16.02.2021 ஆகிய தேதி பதிப்புகளில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) வெளியிட்ட வகையில் கீழ்காணும் விவரப்படி பட்டியல் தொகையை (தினமணி - ரூ.21,090/- Afternoon - ரூ.18,900/-) தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்ததால் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து Sec-15-ன் கீழ் தொகை வழங்கியதை மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| பட்டியல் எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| TN 11178816 | தினமணி | 21,090/- |
| AD/324/AN/20-21 | Afternoon | 18,900/- |

ந.க.எண்.256/2020/இ2

**தீர்மானம் எண்.2501 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.10

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குழந்தை யேசு காலனி பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2012-13-ன் கீழ், கட்டப்பட்ட நியாய விலைக் கடையினை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு, பொது மக்கள் ரேஷன் பொருட்களை வெயில் மற்றும் மழைக்காலங்களில் பாதுகாப்பாக நின்று வாங்குவதற்கு வசதியாக மேற்கூரை அமைக்கவும், கட்டிடத்தை சுற்றிலும் காங்கிரீட் தளம் அமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,40,000/-க்கும் மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2454 நாள் 27.01.2021-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், அன்றைய தினம் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாலும், மேலும் அன்றைய தினத்தில் தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக அமுல்படுத்தப்பட்டதாலும், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 27.02.2021 அன்று

பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மீதான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 03.05.2021 அன்று தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் தளர்த்தப்பட்டதால், மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 05.05.2021 அன்று திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.13% அதிகம் (ரூ.1,12,888.00) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு (ரூ.1,12,660.17) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.199/2021/இ1

**தீர்மானம் எண்.2502 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.11

குளச்சல் நகராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2020-21-ன் கீழ், ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில், குளச்சல் மீன்பிடி துறைமுகம் கிழக்கு பக்கம் அமைந்துள்ள மீனவர் ஓய்வறையில், மீனவர்கள் வலைப்பின்னும் பணி மேற்கொள்வதற்கு வசதியாக தரைதளம் அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு, மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நாகர்கோவில் செயல்முறைகள் ந.க.எண்.ஆ3/2383/2020 நாள் 13.02.2021- ன் படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், அன்றைய தினம் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாலும், மேலும் அன்றைய தினத்தில் தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக அமுல்படுத்தப்பட்டதாலும், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 27.02.2021 அன்று பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மீதான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 03.05.2021 அன்று தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் தளர்த்தப்பட்டதால், மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 05.05.2021 அன்று திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% அதிகம் (ரூ.3,04,818.80) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு (ரூ.3,04,507.52) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1092/2020/இ1

**தீர்மானம் எண்.2503 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.12

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சுனாமி காலனி முதல் கொட்டில்பாடு வரை உள்ள வடிகால் ஓடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,60,000/-க்கும் மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2460 நாள் 12.02.2021-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், அன்றைய தினம் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாலும், மேலும் அன்றைய தினத்தில் தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக அமுல்படுத்தப்பட்டதாலும், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 27.02.2021 அன்று பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மீதான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 03.05.2021 அன்று தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் தளர்த்தப்பட்டதால், மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 05.05.2021 அன்று திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08% அதிகம் (ரூ.2,22,249.00) |
| 2. | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு (ரூ.2,21,842.80) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.10% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.309/2021/இ1

**தீர்மானம் எண்.2504 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.13

இந்நகராட்சி பொறியியல் பிரிவில், குடிநீர் வினியோக பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான 5 எண்ணம் பணியாளர்களை 01.04.2021 முதல் 31.03.2022 வரை 312 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.9,80,000/-க்கும் மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2462 நாள் 12.02.2021-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், அன்றைய தினம் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாலும், அன்றைய தினம் மேலும் அன்றைய தினத்தில் தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக அமுல்படுத்தப்பட்டதாலும், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 27.02.2021 அன்று பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மீதான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 03.05.2021 அன்று தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் தளர்த்தப்பட்டதால், மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 05.05.2021 அன்று திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.33% அதிகம் (ரூ.9,62,520.00) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் (ரூ.9,59,400) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.310/2021/இ1

**தீர்மானம் எண்.2505 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு, பழைய மீன் விற்பனை கூடத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள 2 எண்ணம் மீனவர் ஓய்வறைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,30,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2465 நாள் 12.02.2021-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், அன்றைய தினம் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாலும், மேலும் அன்றைய தினத்தில் தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக அமுல்படுத்தப்பட்டதாலும், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 27.02.2021 அன்று பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மீதான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 03.05.2021 அன்று தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் தளர்த்தப்பட்டதால், மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 05.05.2021 அன்று திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.17% அதிகம் (ரூ.2,00,935.00) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.22 % குறைவு (ரூ.2,00,165.00) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.22% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.308/2021/இ1

**தீர்மானம் எண்.2506 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.15

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,40,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம்

தனது தீர்மானம் எண்.2466 நாள் 12.02.2021-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், அன்றைய தினம் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாலும், மேலும் அன்றைய தினத்தில் தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக அமுல்படுத்தப்பட்டதாலும், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 27.02.2021 அன்று பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மீதான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 03.05.2021 அன்று தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் தளர்த்தப்பட்டதால், மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 05.05.2021 அன்று திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.24% அதிகம் (ரூ.1,09,728.00) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.81% குறைவு (ரூ.1,08,581.48) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.81% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1006/2020/இ1

**தீர்மானம் எண்.2507 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.16

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 பள்ளிவிளாகம் குறுக்குதெருவில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் அமைத்தல் பணி மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,40,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2461 நாள் 12.02.2021-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், அன்றைய தினம் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாலும், மேலும் அன்றைய தினத்தில் தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக அமுல்படுத்தப்பட்டதாலும், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 27.02.2021 அன்று பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மீதான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 03.05.2021 அன்று தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் தளர்த்தப்பட்டதால், மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 05.05.2021 அன்று திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 2.11% அதிகம் (ரூ.2,14,415) |
| 2. | திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு (ரூ.2,09,879.50) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ். சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1374/2020/இ1

**தீர்மானம் எண்.2508 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.17

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் சேதமடைந்துள்ள வடிகால் ஓடை பராமரிப்பு பணிகளை 2021-2022 ஆம் ஆண்டு மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.5,50,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.2463 நாள் 12.02.2021-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், அன்றைய தினம் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாலும், மேலும் அன்றைய தினத்தில் தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக அமுல்படுத்தப்பட்டதாலும், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 27.02.2021 அன்று பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மீதான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 03.05.2021 அன்று தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் தளர்த்தப்பட்டதால், மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 05.05.2021 அன்று திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.14% அதிகம் (ரூ.4,83,046) |
| 2. | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு (ரூ.4,82,205.88) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.157-1/2021/இ1

**தீர்மானம் எண்.2509 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.18

இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகள் மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட மற்றும் வேலைப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 1% மற்றும் 5% வைப்புத் தொகையினை M/s.Kevin Componenets. Chennai உரிமையாளர் வழங்க கோரியுள்ளார். மேற்படி வைப்புத்தொகையினை கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படி காலம்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | பணி விபரம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | M/s.Kevin Components. Chennai | Supply delivery and erection of diesel Genset & 30 KVA Solar PV power generator system. | 50,000/- |
| 2. | | | 90,775/- |
| 3. | | | 1,48,510/- |
| 4. | | | 12,633/- |
| 5 | | Construction of Generator shed and Compound wall for existing OHT | 29,028/- |
| 6 | | | 30,197/- |
| 7 | | | 28,439/- |
| 8 | | | 16,984/- |
| 9 | | | 18,841/- |
| | | **மொத்தம்** | **4,25,407/-** |

மேற்படி காலம்கடந்த வைப்புத் தொகை ரூ.4,25,407/- M/s.Kevin Components. Chennai நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.783/2019/பி1

**தீர்மானம் எண்.2510 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.19

இந்நகராட்சி பொதுப்பிரிவிலுள்ள 3KVA UPS வாங்கப்பட்டு, 6 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால், மின்கலங்கள் (Batteries) காலாவதியாகி, தற்போது Backup நிற்காமல் உள்ளது. இதனால் மின்சாரம் தடைபடும் நேரங்களில் கணிணிகள் தானாக இயக்கத்தை நிறுத்திக்கொள்ளும் நிலை ஏற்பட்டு, கணிணிகள் பழுதுடையும் நிலை ஏற்பட்டுள்ளது. நகராட்சி அலுவலகப் பணிகளில் UPS-ன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, கணிணிகள் மற்றும் UPS-களின் வருடாந்திர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் M/s.Novateur Electrical & Digital systems Pvt Ltd., Madurai நிறுவனத்திடமிருந்து புதிதாக 6 எண்ணம் மின்கலங்கள் வாங்குவதற்கு ரூ.32,505/-க்கு (பழைய மின்கலங்களின் விலை கழித்து மற்றும் GST 28% TCS Value 0.075%) விலைப்ள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி M/s.Novatuer Electricals & Digital systems Pvt Ltd., Madurai நிறுவனத்திடமிருந்து ரூ.32,505/-க்கு புதிதாக 6 எண்ணம் மின்கலங்களை வாங்குவதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.239/2021/AP

**தீர்மானம் எண்.2511அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.20

இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள ஏசுதாஸ் காலனி அங்கன்வாடி மையம், பண்டாரவிளை அரசு நடுநிலைப்பள்ளி ஆகியவற்றில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பணிகளின் அவசர அவசியம் கருதி நகராட்சி பணியாளர்களை கொண்டு மின் வசதி செய்யப்பட்ட வகையில் கீழ்காணும் செலவினங்கள் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | ஏசுதாஸ் காலனி அங்கன்வாடி மையம் மின்சாதன உதிரி பொருட்கள் | ரூ.175/- |
| 2. | பண்டாரவிளை அரசு நடுநிலைப்பள்ளி மின்சாதன உதிரி பொருட்கள் | ரூ.187/- |

மேலும் அம்மா உணவக கழிவறை மின் வசதி இல்லாத காரணத்தால் அம்மா உணவக பணியாளர்களின் பாதுகாப்பினை கருதி தமிழக சட்டமன்ற பொது தேர்தல் 2021 மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்தததால், அவசர அவசியம் கருதி மின்வசதி செய்த வகையில் கீழ்காணும் விபரப்படி செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| அம்மா உணவகம் மின்சாதன உதிரி பொருட்கள் | ரூ.841/- |

எனவே மேற்படி வரிசை எண்.1,2,3-க்கான மொத்த செலவினம் ரூ.1203/- (ரூ.175/- + ரூ.187/- + ரூ.841/-)-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/547/2021

**தீர்மானம் எண்.2512 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.21

குளச்சல் நகராட்சியில் 2021-22 ஆம் ஆண்டிற்கு

1. புதிய குடிநீர் குழாய் இணைப்பு
2. பழுதுபார்ப்பு கட்டணம்
3. துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு கட்டணம்
4. பெயர் மாற்றத்திற்கான கட்டணம்

ஆகியவற்றிற்கு கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. **புதிய குடிநீர் குழாய் இணைப்பு**

a) **குடியிருப்பு பயன்பாடு**

| அளவு | சிமெண்ட் தளம் | தார் தளம் | மண் தளம் |
|---|---|---|---|
| 0-15m | 14822 | 14488 | 7567 |
| 0-30m | 25684 | 25018 | 11081 |
| 0-45m | 37381 | 36382 | 15477 |
| 0-75m | 59271 | 56637 | 22767 |

| | | | |
|---|---|---|---|
| 0-90m | 70381 | 68383 | 26573 |

b) வணிக பயன்பாடு

| அளவு | சிமெண்ட் தளம் | தார் தளம் | மண் தளம் |
|---|---|---|---|
| 0-15m | 19822 | 19488 | 12567 |
| 0-30m | 30684 | 30018 | 16081 |
| 0-45m | 42381 | 41382 | 20477 |
| 0-75m | 64272 | 61637 | 27767 |
| 0-90m | 75381 | 73383 | 31573 |

c) தொழிற்சாலை பயன்பாடு

| அளவு | சிமெண்ட் தளம் | தார் தளம் | மண் தளம் |
|---|---|---|---|
| 0-15m | 17822 | 17488 | 10567 |
| 0-30m | 28684 | 28018 | 14081 |
| 0-45m | 40381 | 39382 | 18477 |
| 0-75m | 62272 | 59637 | 25767 |
| 0-90m | 73381 | 71383 | 29573 |

2. பழுதுபார்ப்பு கட்டணம்

| வ.எண் | தளம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மண் தளம் | 900/- |
| 2 | சிமெண்ட் தளம் | 1500/- |
| 3 | தார் தளம் | 1450/. |

3. துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு கட்டணம்

1. துண்டிப்பு கட்டணம் - ரூ.600/-
2. மறு இணைப்பு கட்டணம் - ரூ.600/-

4. பெயர் மாற்றத்திற்கான கட்டணம்

பெயர் மாற்றத்திற்கான கட்டணம் - ரூ.300/-

ந.க.எண்.இ2/256/2020

**தீர்மானம் எண்.2513 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.22

இந்நகராட்சிக்கு பொது சுகாதாரப்பிரிவு மினி ஆட்டோ எண்.TN75-P-8399-க்கு வாகனத்தில் உள்ள மின்கலம் பழுதாகி விட்ட காரணத்தினால் வாகனம் சரியாக ஸ்டாரட் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே புதிய மின் கலம் வாங்குவதற்கு உள்ளூர் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | SAI BATTERY SERVICE, COLACHEL. | ரூ.6450/- |
| 2. | SIVANESH BATTERY WORKS COLACHEL | ரூ.6670/- |
| 3 | LAWRENCE BATTERY SERVICE COLACHEL | ரூ.6830/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் SAI BATTERY SERVICE, COLACHEL நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கு மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1406/2014/எச்1

**தீர்மானம் எண்.2514 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.23

இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்காக அனைத்து பிரிவுகளிலும் நிறுவப்பட்டுள்ள புதிய கணிணிகள் Warranty யில் இருப்பதால் AMC கொடுக்கப்படவில்லை. Warranty யில் இல்லாத ஏழு பிரிண்டர்கள் மற்றும் பழைய நான்கு கணிணிகளுக்கு ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து அதற்கான பட்டியல் தொகையினை வழங்குவதற்கு ஏதுவாக 2021-2022 ஆம் ஆண்டிற்கு கணிணி மற்றும் பிரிண்டர்களின் பழுது நீக்கப்பணிகளுக்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1,00,000/-க்கும் மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.A2/544/2006

**தீர்மானம் எண்.2515 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.24

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.3,13,14 வரிவிதிப்பு எண்கள் முறையே 148/2018003, 148/2018013, 148/2018014 ஆகிய கடைகளுக்கு

குத்தகை காலம் 01.04.2018 முதல் 31.03.2021 உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்துவிட்டது. மேற்படி கடைகளை வாடகைதாரர்கள் தங்களால் நடத்த இயலாத காரணத்தினால் கடையினை இந்நகராட்சியில் ஒப்படைத்துள்ளனர். கடைகளுக்கான வாடகை நிலுவைத்தொகையினை வாடகைதாரர்களின் முன்வைப்புத் தொகயிலிருந்து ஈடு செய்யவும் மீதமுள்ள தொகையினை திருப்பி கேட்டுள்ளனர். எனவே வாடகைதாரர்களின் முன்வைப்புத் தொகையிலிருந்து மாத வாடகையினை கீழ்காணும் விபரப்படி ஈடு செய்தமைக்கும், மீதமுள்ள தொகையினை திருப்பி வழங்கவும், கடை எண்கள்.3,13,14 ஆகிய கடைகளை மறு ஏலம் விடவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | முன்வைப்புத் தொகை மற்றும் கூடுதல் முன்வைப்புத் தொகை | வைப்புத்தொகையில் மாதவாடகை நிலுவைத் தொகைக்காக ஈடு செய்த தொகை | வழங்க வேண்டிய மீதமுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 148/2018003 | அகமது கபீர் | 1,00,000 + 1,80,000<br>2,80,000 | - | 2,80,000/- |
| 2 | 13 | 148/2018013 | ஜெகன் | 1,00,000 + 48,000<br>1,48,000 | 56640/- | 91,360/- |
| 3 | 14 | 148/2018014 | ஹெலன் | 1,00,000 + 48,000<br>1,48,000 | 47200/- | 1,00,800/- |

ந.க.எண்.A3/01/2020

**தீர்மானம் எண்.2516 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.25

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள் 1,4,5,6,7,8,11,12,15,16,19,20,21,28 முதல் 35 கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள்.15,17,18,19,20,31,32 கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள் 1,2,3,8,9,10,11,13,14,15,16 நவீன மீன்சந்தை முதல் தளம் கடை எண்.2 டாக்டர் அம்பேத்கார் தற்காலிக கடைகள் 1 முதல் 18 மற்றும் சொர்ண ஜெயந்தி கடை எண்கள் 1,2,3,4 ஆகிய கடைகளுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 உடன் குத்தகை காலம் மூன்று ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. மேற்படி கடைகளுக்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்வதற்கான குத்தகை உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ரூ.1,000/- வீதம் இந்நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் கடைகளுக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை வாடகை தொகையில் 15% உயர்வு செய்து கீழ்காணும் விபரப்படி வாடகை தொகை உயர்வு செய்ய மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

**காமராஜர் பேருந்து நிலைய கடைகள்**

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | மாத வாடகை (மாதம் 1-க்கு) | 15% உயர்வு செய்த வாடகை | வரி உயர்வு செய்யப்பட்ட பின்னர் மாத வாடகை(மாதம் 1-க்கு ஜி.எஸ்.டி தவிர) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 148/2018001 | ஜெகதீஷ் | 11300 | 1695 | 12995 |
| 2 | 4 | 148/2018004 | ராமகிருஷ்ணன் | 10000 | 1500 | 11500 |
| 3 | 5 | 148/2018005 | மரிய ஜெறோம் | 9000 | 1350 | 10350 |
| 4 | 6 | 148/2018006 | கென்னடி | 5100 | 765 | 5865 |
| 5 | 7 | 148/20050300 | காதி கிராப்ட் | 3045 | 457 | 3502 |
| 6 | 8 | 148/2018008 | முகம்மது மிக்தாத் | 5100 | 765 | 5865 |
| 7 | 11 | 148/2018011 | ஜரின் விஜயகுமார் | 4000 | 600 | 4600 |
| 8 | 12 | 148/2018012 | ஜரின் விஜயகுமார் | 4000 | 600 | 4600 |
| 9 | 15 | 148/2018015 | பட்டமுத்து | 4000 | 600 | 4600 |
| 10 | 16 | 148/2018016 | ரெஜினி குமார் | 3000 | 450 | 3450 |
| 11 | 19 | 148/2018019 | பிரவின் | 2500 | 375 | 2875 |
| 12 | 20 | 148/2018020 | கிறிஸ்டல் மோகன் | 2500 | 375 | 2875 |
| 13 | 21 | 148/2018021 | கிறிஸ்டல் மோகன் | 2500 | 375 | 2875 |
| 14 | 28 | 148/2018028 | ராதா கிருஷ்ணன் | 3000 | 450 | 3450 |
| 15 | 29 | 148/2018029 | ஜாண்சன் | 4000 | 600 | 4600 |
| 16 | 30 | 148/2018030 | சுஜாதா ராமகிருஷ்ணன் | 4100 | 615 | 4715 |
| 17 | 31 | 148/2018031 | ஜெயசோபனபாய் | 4500 | 675 | 5175 |
| 18 | 32 | 148/2018032 | முகம்மது பாரூக் | 4000 | 600 | 4600 |
| 19 | 33 | 148/2018033 | முகம்மது பாரூக் | 4000 | 600 | 4600 |
| 20 | 34 | 148/2018034 | அரவிந்த் பிரசாத் | 4000 | 600 | 4600 |
| 21 | 35 | 148/2018035 | முகம்மது முசம்பில் | 12430 | 1865 | 14295 |

**கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | 15 | 148/2018054 | அன்சார் | 4000 | 600 | 4600 |
| 23 | 17 | 148/2018056 | சுல்பீர் மாகின் | 4000 | 600 | 4600 |
| 24 | 18 | 148/2018057 | மாகின் அபுபக்கர் | 4000 | 600 | 4600 |
| 25 | 19 | 148/2018058 | மாகின் அபுபக்கர் | 4000 | 600 | 4600 |
| 26 | 20 | 148/2018059 | ஆசிக் மனோஜ்ஜாண் | 4000 | 600 | 4600 |
| 27 | 31 | 148/2018070 | சித்திக் | 6000 | 900 | 6900 |
| 28 | 32 | 148/2018071 | அமலதாஸ் | 6000 | 900 | 6900 |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள்** | | | | | | |
| 29 | 1 | 148/2018104 | பொன்னுமணி | 3000 | 450 | 3450 |
| 30 | 2 | 148/2018105 | பொன்னுமணி | 3000 | 450 | 3450 |
| 31 | 3 | 148/2018106 | உசேன்கான் | 3000 | 450 | 3450 |
| 32 | 8 | 148/2018111 | முகம்மது சுலைமான் | 4000 | 600 | 4600 |
| 33 | 9 | 148/2018112 | முகம்மது சலாவுதீன் | 4000 | 600 | 4600 |
| 34 | 10 | 148/2018113 | சேகர் | 5000 | 750 | 5750 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 35 | 11 | 148/2018114 | சேகர் | 5000 | 750 | 5750 |
| 36 | 13 | 148/2018116 | ஜாண்சன் | 5150 | 773 | 5923 |
| 37 | 14 | 148/2018117 | ஆல்பிரட் | 6000 | 900 | 6900 |
| 38 | 15 | 148/2018118 | ஜாண் நிக்ஸன் | 6000 | 900 | 6900 |
| 39 | 16 | 148/2018119 | ஜாண் நிக்ஸன் | 6000 | 900 | 6900 |
| டாக்டர் அம்பேத்கார் நவீன மீன்சந்தை கடை | | | | | | |
| 40 | முதல் தளம் 2 | 148/2018145 | பனிப்பிச்சை | 10700 | 1605 | 12305 |
| டாக்டர் அம்பேத்கார் தற்காலிக கடைகள் | | | | | | |
| 41 | 1 | 148/2018159 | மனோகரன் | 7000 | 1050 | 8050 |
| 42 | 2 | 148/2018160 | மனோகரன் | 7000 | 1050 | 8050 |
| 43 | 3 | 148/2018161 | ஜெகதீஷ் | 7000 | 1050 | 8050 |
| 44 | 4 | 148/2018162 | ராஜேஷ் | 7000 | 1050 | 8050 |
| 45 | 5 | 148/2018163 | ஜாண்சன் | 7000 | 1050 | 8050 |
| 46 | 6 | 148/2018164 | விஜிகுமார் | 7000 | 1050 | 8050 |
| 47 | 7 | 148/2018165 | ராஜகுமார் | 6000 | 900 | 6900 |
| 48 | 8 | 148/2018166 | ஜனேசி | 6000 | 900 | 6900 |
| 49 | 9 | 148/2018167 | அகமது கபீர் | 6000 | 900 | 6900 |
| 50 | 10 | 148/2018168 | ஜசக் அந்தோணிபிச்சை | 6000 | 900 | 6900 |
| 51 | 11 | 148/2018169 | செல்வராஜ் | 6000 | 900 | 6900 |
| 52 | 12 | 148/2018170 | பிரபா | 6000 | 750 | 6900 |
| 53 | 13 | 148/2018171 | ஜெயந்தி | 5000 | 750 | 5750 |
| 54 | 14 | 148/2018172 | பால்தாஸ் | 5000 | 750 | 5750 |
| 55 | 15 | 148/2017173 | சங்கர் | 5000 | 750 | 5750 |
| 56 | 16 | 148/2018174 | ஹம்சி முகம்மது | 5000 | 750 | 5750 |
| 57 | 17 | 148/2018175 | தங்க நாடார் | 5000 | 750 | 5750 |
| 58 | 18 | 148/2018176 | குமாரதாஸ் | 5000 | 750 | 5750 |
| சொர்ண ஜெயந்தி கடைகள் | | | | | | |
| 59 | 1 | 148/2018152 | மணிவண்ணன் | 1500 | 225 | 1725 |
| 60 | 2 | 148/2018153 | காஜாமுகைதீன் | 2000 | 300 | 2300 |
| 61 | 3 | 148/2018154 | தாகிறா பீவி | 2000 | 300 | 2300 |
| 62 | 4 | 148/2018155 | அப்துல் கரீம் | 2000 | 300 | 2300 |

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2517 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.26

குளச்சல் நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளில் குப்பைகளை துப்புரவு பணியாளர்களால் தரம் பிரித்து வாங்கும் போது அதில் இருந்து பெறப்படும் Non-Saleable பிளாஸ்டிக் சுமார் 40MT அளவில் நகராட்சி கலவை உரக்கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இவற்றை Papperman Environmental solution private ltd, நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டபடி, JCB மூலம் லாரியில் ஏற்றுவதற்கும், கம்போஸ்டில் உள்ள குப்பைகளை அவ்வப்போது Rotate செய்து சமன்படுத்துவதற்கும்

ஆகும் உத்தேச செலவினம் 2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து தனி அலுவலர் தீர்மானம் எண்.2471 நாள் 25.02.2021 அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி JCB மூலம் லாரியில் பிளாஸ்டிக் ஏற்றுவதற்கு 30.03.2021 தேதியில் விலைப்புள்ளி கோரப்பட்டதில், 1 மணிநேரத்திற்கு ரூ.845/- என்ற அளவில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய JORSHAL AGENCIES. REETHAPURAM என்ற நிறுவனத்தை, அவசர அவசியம் கருதியும், சட்டமன்ற தேர்தல் நேரம் கருத்தில் கொண்டு, மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 1920, பிரிவு 15-ன் கீழ், பணி உத்திரவு வழங்கப்பட்டதை பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1360/2017/எச்1

**தீர்மானம் எண்.2518 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.27

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாகத்தில் உள்ள கடை எண்.3-ஐ திரு.வேலப்பன் என்பவர் 2007-2008 ஆம் ஆண்டுகளில் மாத வாடகைக்கு எடுத்துள்ளார். மேற்படி கடைக்கு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டின்படி ரூ.14424/- இருப்பில் உள்ளது. எனவே அன்னாருக்கு (திரு.வேலப்பன்) இருப்பில் உள்ள தொகையினை திருப்பி வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.424/2021/அ1

**தீர்மானம் எண்.2519 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.28

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோகப் பணிகளை மேற்கொள்வதற்காக 5 பணியாளர்களை 01.04.2020 முதல் 31.03.2021 வரை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துதல் பணிக்கான ஒப்பந்த காலம் 31.03.2021-ல் முடிவடைவதை கருத்தில் கொண்டு, மேற்படி பணிக்கு 27.02.2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில் 26.02.2021 அன்று தமிழக சட்டமன்ற பொது தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் அமுல்படுத்தப்பட்டதால், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் வைக்கப்பட்டது. குடிநீர் வினியோக பணிகளின் அவசர அவசியம் கருதி, ஏப்ரல் 2021 முதல் ஜுன் வரையிலான 3 மாதங்களுக்கு சென்ற வருட தினக்கூலி அடிப்படையில் 5 பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதற்கு திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,70,000/-ஐ நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் ஆணையரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.283/2020/இ1

**தீர்மானம் எண்.2520 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.29

இந்நகராட்சியில், 1592 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், தெருவிளக்கு பராமரிப்பு பிரிவில் ஒரு மின்கம்பியாளர் மற்றும் ஒரு மின்கம்பி உதவியாளர் பணியிடங்கள் மட்டுமே தோற்றுவிக்கப்பட்டுள்ளதால், 600 தெருவிளக்கு பராமரிப்பிற்கு ஒரு மின்கம்பியாளர் மற்றும் ஒரு உதவியாளர் என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.ப.3). அரசாணை நிலை எண்.70 நாள் 05.05.1998-ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், நகராட்சி பகுதிகளில் பழுதடையும் தெருவிளக்குகளை உடனுக்குடன் சரிசெய்வதற்கு ஏதுவாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலியின் படி, 2 எண்ணம் ஒப்பந்த பணியாளர்கள் 01.07.2020 முதல் 30.06.2021 வரை பணிக்கு அமர்த்தப்பட்டது. மேற்படி அனுமதி காலம் 30.06.2021-ல் முடிவடைவதால், தெருவிளக்கு பணிகளில் மேற்படி பணியாளர்களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை எண்.அ1/9953/2020 நாள் 14.07.2020-ன் படி, நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நாள் ஒன்றிற்கு ரூ.615/- வீதம் தினக்கூலி அடிப்படையில், 2 எண்ணம் பணியாளர்களை ஜுலை 2021 முதல் ஜுன் 2022 வரையிலான ஓர் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4,50,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.579/2021/இ1

**தீர்மானம் எண்.2521 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.30

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை (DM.II), அரசாணை (MS) எண்.369 நாள் 06.05.2021-ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.9691/J2/2021 நாள் 11.05.2021-ன்படி, இந்நகராட்சிக்கு கொரோனா 2019 நோய் தடுப்பு பணிக்காக ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1374/2021/எச்1

**தீர்மானம் எண்.2522 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.31

தமிழக சட்டமன்ற பொது தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தொகுதி இடைதேர்தல் 2021-ல் 100% வாக்களிப்பதற்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, Sveep Mass programme நடத்துவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள குளச்சல் மரமடி பகுதியில் மீன்பிடி துறைமுகம் அருகில் கடற்கரையோரமாக பொது மக்களுக்கு ஒரு விரல் புரட்சி விழிப்புணர்வு பயணம் “நமது ஓட்டு விற்பனைக்கு அல்ல” என்ற தலைப்பில் மணல் சிற்பம் அமைக்க தேர்தல் ஆணையரக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களின் 26.03.2021 ஆம் தேதிய நேரடி அறிவுரையில் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் புல், புதர்களை அப்புறப்படுத்தி சமன்படுத்துவதற்கும் சிற்பம் அமைப்பதற்கும் தண்ணீர் வசதி செய்தல்,

இரவில் பணி செய்வதற்கு மின் விளக்கு அமைத்தல் ஆகிய பணிகளை தேர்தல் அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15-ன் கீழ் நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ஜாண்றோஸ் என்பவர் மூலம் மேற்கொண்டதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,500/- நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**ந.க.எண்**.447/2019/**அ**2

**தீர்மானம் எண்.2523 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் மே மாத சாதாரணக்கூட்டம் 31.05.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

கொரோனா நோய் தடுப்பு அவசர பணிகளை ILI கணக்கெடுப்பு பணி, Swab Testing, அனைத்து வார்டு பகுதிகளிலும் கபசுர குடிநீர் வினியோகம் போன்ற பணிகளை விரைவுபடுத்திட இரண்டு ஆட்டோ மூலம் மேற்கொள்வதற்கு, தகுதி வாய்ந்த ஆட்டோ உரிமையாளர்களிடமிருந்து 24.05.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

**விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | காணிக்கை மாதா 5,<br>26/68A5. மாதா காலனி, குளச்சல்<br>TN 74 AK 3044 | நாள் ஒன்றுக்கு ஆட்டோ வாடகை, ஆட்கூலி டீசல் செலவு உட்பட | ரூ.1000/- |
| 2 | ஸ்ரீநிஷ் ஆட்டோ<br>26/44, அழகனார்கோட்டவிளை, களிமார், குளச்சல்.<br>TN 75 Y 2053 | நாள் ஒன்றுக்கு ஆட்டோ வாடகை, ஆட்கூலி டீசல் செலவு உட்பட | ரூ.1000/- |
| 3 | மஹா ஆட்டோ,<br>9/247, அழகனார்கோட்டவிளை, களிமார், குளச்சல்.<br>TN 74 D 7214 | நாள் ஒன்றுக்கு ஆட்டோ வாடகை, ஆட்கூலி டீசல் செலவு உட்பட | ரூ.1200/- |
| 4 | டென்னிஸ் ஆட்டோ<br>7/98A, கொட்டில்பாடு, குளச்சல்<br>TN 75 X 2872 | நாள் ஒன்றுக்கு ஆட்டோ வாடகை, ஆட்கூலி டீசல் செலவு உட்பட | ரூ.1300/- |

மேற்காணும் 4 விலைப்புள்ளிகளில் வ.எண்.1 மற்றும் 2-ல் கண்டுள்ள ஆட்டோ உரிமையாளர்கள் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதால், அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.577/2021/எச்1

**தீர்மானம் எண்.2524 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்கு 24 வார்டுகளிலும் கபசுர குடிநீர் வழங்குவதற்கு தேவையான பொருட்களை (10 கேன், 5 Tray, 100 டம்ளர்) வினியோகம் செய்வதற்கு 24.05.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

விபரம்

| | | |
|---|---|---|
| 1 | Sree Ganesh Metal & Stores Thingal Nagar. | Rs. 27,250/- |
| 2 | New Annai Velankanni Metals, Thingal Nagar | Rs.25,200/- |

மேற்காணும் 2 விலைப்புள்ளிகளில் வ.எண்.2-ல் கண்டுள்ள New Annai Velankanni Metals,Thingal Nagar நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.577/2021/எச்1

**தீர்மானம் எண்.2525 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.10,00,000/-க்கு தனி அலுவலரின் தீர்மானம் எண்.2488, நாள் 25.02.2021-ன் படி, மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில் 20.05.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | Kanyakumari Co-operative printing press, Thuckalay. | 5,05,760/- |
| 2. | The Erode District printers Industrial Co-operative society ltd, Muthampalayam, Erode | 5,45,957/- |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் Kanyakumari Co-operative printing press, Thuckalay, நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று, அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, வினியோகம் உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1347/2015/சி1

**தீர்மானம் எண்.2526 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்காக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9691/J2/2021, நாள் 11.05.2021-ன் படி, பொருட்கள் வாங்குவதற்கு ரூ.30,00,000/- இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொரோனா நோய் தடுப்பு பணிக்கான பொருட்களை

வினியோகம் செய்வதற்கு 28.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| 1. | M/s/Jayapaba Traders, Thazhakudy, | வ.எண்.1,10 ' வ.எண்.22, | மதிப்பீட்டு விகிதம் மதிப்பீட்டை விட 0.19% குறைவு. |
| 2. | M/s.Kanyakumari Co-operative printing press, Thuckalay | வ.எண்.5,8,9 வ.எண்.21, வ.எண்.23 | மதிப்பீட்டு விகிதம் மதிப்பீட்டை விட 0.21% குறைவு. மதிப்பீட்டை விட 0.22% குறைவு. |
| 3. | M/s.Parisith Traders, Trichy | வரிசை எண்.2 முதல் 4 வரை, வ.எண்.6,7 மற்றும் 11 முதல் 20 வரை | மதிப்பீட்டு விகிதம். |

மேற்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதத்தினை ஏற்று, கொரோனா நோய் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதி, வரிசை எண்.1,10,22 வரையிலான இனங்களுக்கு M/s/Jayapaba Traders, Thazhakudy, வரிசை எண்.5,8,9,21,23 வரையிலான இனங்களுக்கு M/s.Kanyakumari Co-operative printing press, Thuckalay மற்றும் வரிசை எண்.2 முதல் 4 வரை 6,7,11 முதல் 20 வரையிலான இனங்களுக்கு M/s.Parisith Traders, Trichy ஆகிய வினியோகஸ்தர்களுக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வினியோக உத்தரவு வழங்கியுள்ளதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.577/2021/எச்1

**தீர்மானம் எண்.2527 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கிருமி நாசினி தெளிக்கும் இயந்திரம் இரு எண்ணம் (கையால் இயக்குவது) மற்றும் கிருமி நாசினி தெளிக்கும் பெரிய இயந்திரம் KKGE-200 (Spray Machine) ஆகியவை பழுதாகிவிட்டது. மேற்படி இயந்திரங்களை தெங்கப்புதூர் SKP நிறுவனத்தில் சரி செய்த வகையில் ரூ.2,000/-, ரூ.3,100/- சேர்த்து ரூ.5,100/- செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் கொரோனா நோய் தொற்று பரவல் தடுப்பதற்காக பொது மக்கள் இடைவெளி விட்டு நிற்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தை, பேருந்து நிலையத்திலும் வட்டம் போடுவதற்கு பெயின்ட் மற்றும் பிரஸ் வாங்கிய வகையில் ரூ.980/-ம் செலவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகை மொத்தம் சேர்த்து ரூ.6080/- ஐ துப்புரவு பணி மேற்பார்வையாளரால் செலவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை அன்னாருக்கு கொரோனா நிதியிலிருந்து வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.577/2021/எச்1

**தீர்மானம் எண்.2528 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.6

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பயன்பாட்டில் உள்ள தள்ளு வண்டிகளில், பழுதடைந்த நிலையில் உள்ள 10 எண்ணம் தள்ளு வண்டிகளின் முன்புறம், பின்புறம் மற்றும் அடிப்பகுதிகளில் Ms Sheet-ஐ பயன்படுத்தி Welding செய்தல், சக்கர (wheel) பகுதிகளை சரி செய்தல் மற்றும் வர்ணம் பூசுதல் (Full painting) ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.68,000/-க்கும் , மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2492, நாள் 25.02.2021-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. தமிழக சட்டமன்ற பொது தேர்தல் 2021 மாதிரி நடத்தை விதிகள் அமுலாக்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோருதல் தொடர்பான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டு, 03.05.2021 அன்று மாதிரி நடத்தை விதிகள் விலக்கிக்கொள்ளப்பட்ட பின்பு, 20.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Jayapaba Traders, Thazhakudy | மதிப்பீட்டை விட 2.94% அதிகம் (ரூ.70,000/-) |
| 2. | M/s.Stevewin Associates, Kottamavu, Mulagamoodu | மதிப்பீட்டை விட 0.74% குறைவு (ரூ.67,500/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Stevewin Associates, Kottamavu நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.74% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.277-1/2021/இ1

**தீர்மானம் எண்.2529 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.7

யாஸ் புயல் காரணமாக குளச்சல் நகராட்சி பகுதியில் 25.05.2021 அன்று கனமழை பெய்ததை தொடர்ந்து கொட்டில்பாடு, சிங்காரவேலர் காலனி, மரமடி ஆகிய பகுதிகளிலுள்ள குடியிருப்புகளில் மழைநீர் புகுந்த காரணத்தால் அப்பகுதியிலுள்ள 39 குடும்பங்களை சார்ந்த 151 நபர்கள் வார்டு 18-ல் அமைந்துள்ள லோப்பஸ் மண்டபத்தில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் இதர வசதிகளை செய்து கொடுக்க மாவட்ட நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி 151 நபர்களுக்கு தேவையான உணவு மற்றும் இதர வசதிகள் செய்து கொடுத்த வகையில் ரூ.3510/- திரு.மு.தமிழ்செல்வன் வருவாய் உதவியாளரால் செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.589/2021/எச்1

**தீர்மானம் எண்.2530 அனுமதிக்கப்படுகிறது**